Australian Government

COVID-19 VACCINATION

‘கோவிட்-19’ தடுப்பூசி மருந்து இட்டுக்கொள்வதற்கான சம்மதப் படிவம்

இந்தப் படிவத்தை நீங்கள் நிரப்புவதற்கு முன்பாக, நீங்கள் இட்டுக்கொள்ளப்போகும் தடுப்பூசி மருந்தினைப் பற்றிய தகவல் ஏட்டினை நீங்கள் வாசித்திருக்கிறீர்கள் என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்: Vaxzevria (AstraZeneca), Comirnaty (Pfizer), Spikevax (Moderna) அல்லது Nuvaxovid (Novavax).

கடைசிப் புதுப்பிப்பு: 7 ஜூலை 2022

‘கோவிட்-19’ தடுப்பூசி மருந்து இட்டுக்கொள்வது குறித்து

‘கோவிட்-19’ தடுப்பூசி மருந்து ஒன்றினை இட்டுக்கொள்பவர்களுக்கு ‘கோவிட்-19’ நோயினால் சுகவீனம் அடையும் வாய்ப்பு மிகக் குறைவாக இருக்கும்.

நான்கு வர்த்தகப் பெயர்களைக் கொண்ட தடுப்பூசி மருந்துகள் ஆஸ்திரேலியாவில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அனைத்துமே செயலூக்கம் மிக்கவை மற்றும் பாதுகாப்பானவை.

பின் வரும் விதமாக நீங்கள் தடுப்பூசிகளை இட்டுக்கொள்ளலாம்:

- நீங்கள் 18 அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடையவராக இருந்தால் AstraZeneca அல்லது Novavax
- நீங்கள் 6 அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடையவராக இருந்தால் Moderna*
- நீங்கள் 5 அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடையவராக இருந்தால் Pfizer*

*12-இற்குக் கீழ்ப்பட்ட வயதுடைய குழந்தைகளுக்கென தனி சம்மதப் படிவங்கள் உள்ளன.

60 வயதிற்குக் கீழ்ப்பட்ட வயதுவந்தோருக்கு AstraZeneca -வை விட Pfizer, Moderna அல்லது Novavax ஆகிய தடுப்பூசி மருந்துகள் தெரிவு செயப்படுகின்றன.

பெயர்:												
‘மெடிகெயர்’ இலக்கம்:												

பெரும்பான்மையானவர்களுக்கு ஆரம்பத்தில் இரண்டு மருந்தளவுகள் தேவைப்படும். இது 'ஆரம்ப நிலை மருந்தளிப்பு' (primary course) எனப்படும்.

நோயெதிப்புத் திறன் மிகவும் தீவிரமாகப் பாதிக்கப்பட்டுள்ளவர்களுடைய நோயெதிர்ப்புத் திறனை அனுகூலமான அளவுகளுக்குக் கொண்டுவருவதற்காக அவர்களுக்கு மூன்றாவது ஆரம்ப-நிலை மருந்தளவு ஒன்று தேவைப்படலாம்.

ஆரம்ப-நிலைத் தடுப்பூசிகளை இட்டுக்கொண்டதிலிருந்து 3 மாதங்களுக்குப் பிறகு ஊக்க ஊசிகள் கிடைக்கும். குறிப்பிட்ட ஆட்களுக்கு, முதலாவது ஊக்க மருந்தை இட்டுக்கொண்டதிலிருந்து 3 மாதங்களுக்குப் பிறகு கூடுதல் ஊக்க மருந்தளவுகள் கிடைக்கும் (இது நான்காவது மருந்தளவு என்றும் சொல்லப்படுகிறது).

- 12 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடையவர்கள் Pfizer -இன் ஊக்க மருந்தளவு ஒன்றை இட்டுக்கொள்ளலாம்.
- 18 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடையவர்கள் Pfizer அல்லது Moderna-வை ஊக்க மருந்தாக இட்டுக்கொள்ளலாம்.
- 18 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடையவர்களுக்கு AstraZeneca மற்றும் Novavax தெரிவு செய்யப்படுவதில்லை, ஆனால் சில தருணங்களில் பயன்படுத்தப்படலாம்.

மேலதிகத் தகவல்களுக்கு www.health.gov.au/covid-19-vaccines எனும் 'சுகாதாரத் திணைக்கள'த்தினது 'கோவிட்-19' தடுப்பூசி வலைத்தலப் பக்கத்திற்குச் செல்லுங்கள்.

'கோவிட்-19' தடுப்பூசி மருந்துகள் பாதுகாப்பானவை என்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவ வல்லுநர்கள் அவற்றை ஆய்வு செய்துள்ளார்கள். பெரும்பான்மையான பக்க விளைவுகள் மிதமானவையாகும். தடுப்பூசி மருந்தினை இட்டுக்கொள்ளும் நாளன்று இவை தோன்றக்கூடும், மற்றும் ஏறத்தாழ ஒன்று அல்லது இரண்டு நாட்களுக்கு இவை நீடிக்கக்கூடும். எந்தவொரு தடுப்பூசிக்கும் அல்லது மருந்திற்கும் இருப்பதைப் போல, அரிதான மற்றும்/அல்லது அறியப்படாத பக்க விளைவுகள் இருக்கலாம்.

AstraZeneca -வை இட்டுக்கொண்ட பிறகு ஏற்படக்கூடிய மிகவும் அரிதானதொரு பக்க விளைவு 'த்ரோம்போசிஸ் வித் த்ரோம்போசைட்டொபீனியா சின்ட்ரம்' (thrombosis with thrombocytopenia syndrome) அல்லது TTS என்பதாகும். இதற்கு 'குறைந்த இரத்த வட்டுகளோடு கூடிய இரத்த உறைவு (thrombosis)' என்று பொருள். Pfizer அல்லது Moderna -விற்குப் பிறகு TTS ஏற்படுவதில்லை.

Pfizer மற்றும் Moderna -வைத் தொடர்ந்து 'மையோகார்டைட்டிஸ்' மற்றும் 'பெரிகார்டைட்டிஸ்' (இதய அழற்சிகள்) என்பன ஏற்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது. இவை ஏற்பட்ட பெரும்பான்மையான தருணங்கள் மிதமானவையாக இருந்துள்ளன, மற்றும் இவை ஏற்பட்டுள்ளவர்கள் விரைவில் குணமடைந்துள்ளனர்.

தடுப்பூசியை நீங்கள் இட்டுக்கொண்ட பிறகு உங்களுக்குக் கவலை ஏற்படுத்தும் பக்க விளைவுகள் ஏதும் உங்களுக்கு இருந்தால் உங்களுடைய சுகாதாரப் பராமரிப்பு வழங்குநருக்கு அதைத் தெரிவியுங்கள்.

தடுப்பூசியை நீங்கள் இட்டுக்கொண்ட பிறகு நீங்கள் எப்படி இருக்கிறீர்கள் என்று தெரிந்துகொள்ள நீங்கள் தடுப்பூசியைப் பெற்றதற்கு அடுத்த வாரத்தில் 'குறுஞ்செய்தி' (SMS) அல்லது மின்னஞ்சல் மூலம் உங்களுடன் தொடர்புகொள்ளப்படலாம்.

'கோவிட்-19' தடுப்பூசியை இட்டுக்கொண்ட பிறகு சிலருக்கு 'கோவிட்-19' நோய் ஏற்படலாம். 'கோவிட்-19'-இன் பரவலை நிறுத்துவதற்கு, உங்களுடைய மாநிலம் அல்லது எல்லைப்பகுதியில் வேண்டப்படுவதற்கு ஏற்ப, பின் வருவனவற்றை உள்ளடக்கிய அனைத்து பொது சுகாதார அறிவுரைகளை நீங்கள் இப்போதும் கட்டாயமாகப் பின்பற்ற வேண்டும்:

- விலகியிருங்கள் - மற்றவர்களிடமிருந்து குறைந்தபட்சமாக 1.5 மீட்டர் தூர இடைவெளி விட்டு விலகியிருங்கள்

பெயர்:												
'மெடிகெயர்' இலக்கம்:												

- சோப்பு மற்றும் தண்ணீரைப் பயன்படுத்தி உங்களுடைய கைகளை அடிக்கடிக் கழுவிக்கொண்டிருங்கள், அல்லது கைச் சுத்திகரிப்பானைப் பயன்படுத்துங்கள்
- முகக் கவசம் ஒன்றை அணியுங்கள்
- சளி அல்லது சளிச்-சுரம் போன்ற நோயறிகுறிகளுடன் நீங்கள் உடல்நலம் சரியில்லாமல் இருந்தால் வீட்டிலேயே இருங்கள் மற்றும் நோயறிவுச் சோதனையை மேற்கொள்வதற்கான ஏற்பாட்டினைச் செய்யுங்கள்.

சட்டத்தின் பிரகாரம், உங்களுக்குத் தடுப்பூசி மருந்தை இடும் நபர் அதைக் கட்டாயமாக 'ஆஸ்திரேலியத் தடுப்பு மருந்தளிப்புப் பதிவே'(Australian Immunisation Register)ட்டில் பதிவு செய்தாகவேண்டும். பின் வருவனவற்றின் மூலமாக நீங்கள் உங்களுடைய தடுப்பூசிப் பதிவுகளை இணையவழியில் பார்க்கலாம்:

- 'மெடிகெயர்' கணக்கு
- 'மை-கவ்' (MyGov) கணக்கு
- 'என்-சுகாதாரப்-பதிவு' (My Health Record) கணக்கு ('மெடிகெயர்' இலக்கம் ஒன்று அல்லது 'தனி-நபர் சுகாதாரப் பராமரிப்பு அடையாளக் குறியீடு ஒன்றைக் கொண்டு நீங்கள் இதற்காகப் பதிவு செய்துகொள்ளலாம்).

உங்களைப் பற்றிய தகவல்கள் பயன்படுத்தப்படும் விதம்

உங்களைப் பற்றிய தனிப்பட்ட விபரங்கள் சேகரிக்கப்படும், இருப்பில் வைக்கப்படும் மற்றும் பயன்படுத்தப்படும் விதத்தினைப் பற்றிய தகவல்களுக்கு www.health.gov.au/using-our-websites/privacy/privacy-notice-for-covid-19-vaccinations எனும் வலைத்தலப் பக்கத்தினைப் பாருங்கள்.

மருந்துக்கடை ஒன்றில் நீங்கள் உங்களுக்கான தடுப்பூசிமருந்தினைப் பெற்றால், உங்களைப் பற்றிய தகவல்களில் சிலவற்றை 'மருந்துக்கடைத் திட்ட நிர்வாகி' (Pharmacy Programs Administrator)-யுடன் அந்த மருந்துக்கடை கட்டாயமாகப் பகிர்ந்துகொள்ளவேண்டும். ஆஸ்திரேலிய அரசாங்கத்திடமிருந்து கட்டணத் தொகையை மருந்துக்கடை கோருவதற்காக இப்படி செய்யப்படும். இது ஏன் தேவைப்படுகிறது மற்றும் எந்தத் தகவல்கள் பகிர்ந்துகொள்ளப்படுகின்றன என்பதைப் பற்றிய மேலதிகத் தகவல்கள் மேலே சொல்லப்பட்டுள்ள வலைத்தல இணைப்பில் தரப்பட்டுள்ளன.

உங்களுடைய தடுப்பூசி மருந்தினை நீங்கள் இட்டுக்கொள்ளும் நாளன்று

நீங்கள் தடுப்பூசி மருந்தினை இட்டுக்கொள்வதற்கு முன்பாக, பின் வருவன உங்களுக்கு ஏற்பட்டிருக்கின்றனவா என்பதை உங்களுக்குத் தடுப்பூசி இடும் நபரிடம் சொல்லுங்கள்:

- ஒவ்வாமை எதுவும் ஏற்பட்டிருக்கிறதா என்பதை, குறிப்பாக, பின் வருவனவற்றின் காரணமாக 'ஆனஃபிலாக்ஸிஸ்' (anaphylaxis) எனும் கடும் ஒவ்வாமை ஏற்பட்டிருக்கிறதா என்பதை:
  - இதற்கு முந்தைய 'கோவிட்-19' தடுப்பூசி மருந்தளவு ஒன்றின் காரணமாக
  - 'கோவிட்-19' தடுப்பூசி மருந்து ஒன்றின் செய்பொருள் ஒன்றின் காரணமாக
  - வேறெந்தத் தடுப்பூசிகள் அல்லது மருந்துகளின் காரணமாக

- உங்களுடைய நோயெதிர்ப்புத் திறனில் குறைவு ஏற்பட்டிருந்தால். நோய்த்தொற்றுகளையும் மற்ற நோய்களையும் எதிர்த்துப் போரிடுவதை உங்களுக்குச் சிரமமாக்கக் கூடிய விதத்தில் உங்களுடைய நோயெதிர்ப்புத் திறன்

பலவீனமடைந்துவிட்டிருக்கிறது என்பதை இது குறிக்கும். இப்போதும் நீங்கள் 'கோவிட்-19' தடுப்பூசி மருந்தினை இடுக்கொள்ளலாம், ஆனால், உங்களுடைய தடுப்பூசி மருந்தை நீங்கள் இட்டுக்கொள்வதற்கான மிகச் சிறந்த நேரம் எது என்பதைப் பற்றி உங்களுடைய மருத்துவருடன் பேசுங்கள். உங்களுக்கு இருக்கும் நோய்நிலை மற்றும் நீங்கள் பெற்றுவரும் சிகிச்சை ஆகியவற்றைப் பொறுத்து இது அமையும்.

பெயர்:												
'மெடிகெயர்' இலக்கம்:												

சம்மதத்திற்கான சரிபார்ப்புப் பட்டியல்

ஆம்	இல்லை	
☐	☐	இதற்கு முன்பு நீங்கள் இட்டுக்கொண்ட 'கோவிட்-19' தடுப்பூசி மருந்தளவு ஒன்றின் காரணமாக உங்களுக்கு ஒவ்வாமை எதிர்வினை ஒன்று ஏற்பட்டிருக்கிறதா?
☐	☐	வேறொரு தடுப்பூசி மருந்து அல்லது மருந்தின் காரணமாக உங்களுக்கு 'ஆனஃபிலாக்ஸிஸ்' எனும் கடும் ஒவ்வாமை ஏற்படிருக்கிறதா?
☐	☐	அனுபவம் மிக்க தடுப்பு-மருந்து வழங்குநர் அல்லது மருத்துவ வல்லுநர் ஒருவரது மீளாய்வினைத் தொடர்ந்து 'கோவிட்-19' தடுப்பூசியின் முந்தைய மருந்தளவு ஒன்றின் காரணமாக ஏற்பட்டது (மற்றும் வேறொரு காரணத்தை அவர் அடையாளம் காணப்படவில்லை) என்று சொல்லப்பட்ட பாரதூரமான எதிர் விளைவு ஒன்று உங்களுக்கு ஏற்பட்டிருக்கிறதா?
☐	☐	மீண்டும் மீண்டும் 'ஆனஃபிலாக்ஸிஸ்'- ஐ உண்டுபண்ணிய 'மாஸ்டோசைடோஸிஸ்' ('மாஸ்ட்' எனப்படும் உயிரணுக் கலன்களின் அசாதாரண வளர்ச்சிக் கோளாறு) உங்களுக்கு எப்போதாவது ஏற்பட்டிருக்கிறதா?
☐	☐	இதற்கு முன்பு உங்களுக்குக் 'கோவிட்-19' ஏற்பட்டிருக்கிறதா?
☐	☐	இரத்தக் கசிவுக் கோளாறு ஒன்று உங்களுக்கு இருக்கிறதா?
☐	☐	உங்களுடைய இரத்தத்தை மெலிதாக்குவதற்கான மருந்து எதையும் நீங்கள் உட்கொண்டுவருகிறீர்களா (இரத்த உறைவு எதிர்ப்பு வைத்தியம்)?
☐	☐	உங்களுடைய நோயெதிர்ப்பு முறைமை பலஹீனமடந்திருக்கிறதா (immunocompromised)?
☐	☐	நீங்கள் கர்ப்பமாக இருக்கிறீர்களா?#
☐	☐	இருமல், தொண்டை வலி, சுரம் ஆகியவற்றுடன் நீங்கள் உடல்நிலை சரியில்லாமல் இருக்கிறீர்களா, அல்லது இன்னொரு விதத்தில் உடல்நிலை சரியில்லாதது போல் இருக்கிறீர்களா?
☐	☐	இதற்கு முன்பு 'கோவிட்-19' தடுப்பூசி மருந்து ஒன்றை இட்டுக்கொண்டிருக்கிறீர்களா?
☐	☐	கடந்த 7 நாட்களில் வேறு எந்தத் தடுப்பூசியையாவது இட்டுக்கொண்டிருக்கிறீர்களா?
AstraZeneca -வை இட்டுக்கொள்பவர்களுக்கு மட்டும் இது பொருந்தும்		
☐	☐	உங்களுக்கு 'இரத்தக்குழாய் திரவக் கசிவு நோயறிகுறி' (capillary leak syndrome) இருந்து அது எப்போதாவது கண்டறியப்பட்டிருக்கிறதா?

பெயர்:	
'மெடிகெயர்' இலக்கம்:	

☐	☐	நீங்கள் முன்பு இட்டுக்கொண்ட AstraZeneca -வின் மருந்தளவிற்குப் பிறகு 42 நாட்களுக்குள்ளாக 'த்ரோம்போசைட்டொபீனியா' (இரத்த வட்டுகள் குறையும் நிலை)யுடன் சேர்ந்து 'த்ரோம்போசிஸ்' எனப்படும் இரத்த உறைவு உங்களுக்கு ஏற்பட்டிருக்கிறதா?
☐	☐	'பெருமூளைச் சிரை இரத்த உறைவு' (cerebral venous sinus thrombosis) ('செரிப்ரல் வீனெஸ் சைனஸ் த்ரோம்போசிஸ்)) எனும் நோய்-நிலை உங்களுக்கு எப்போதாவது ஏற்பட்டிருக்கிறதா?*
☐	☐	'ஹெபரின்' என்ற மருந்தின் காரணமாக ஏற்படும் 'இரத்த வட்டு'க் குறைபாடு' ('thrombocytopenia') ('த்ரோம்போ-சைட்டொபீனியா')) எனும் நோய்-நிலை உங்களுக்கு எப்போதாவது ஏற்பட்டிருக்கிறதா?*
☐	☐	அடிவயிற்று இரத்த நாளங்களில் எப்போதாவது உங்களுக்கு இரத்த உறைவு ஏற்பட்டிருக்கிறதா?*
☐	☐	இரத்த உறைவுகளோடு சம்பந்தப்பட்ட 'ஆண்ட்டி-ஃபாஸ்ஃபோலிபிட் சிண்ட்ரம்' எனும் நோய்நிலை எப்போதாவது உங்களுக்கு ஏற்பட்டிருக்கிறதா?*
☐	☐	நீங்கள் 60 வயதிற்குக் கீழ்ப்பட்டவரா?*

கர்ப்பிணிப் பெண்களுக்கு Pfizer மற்றும் Moderna தெரிவு செய்யப்படும் தடுப்பூசிகளாகும். இந்தத் தடுப்பூசிகள் கிடைக்காவிட்டால், Novavax அல்லது AstraZeneca கருத்தில் கொள்ளப்படலாம். மேலதிகத் தகவல்களுக்கு https://www.health.gov.au/initiatives-and-programs/covid-19-vaccines/who-can-get-vaccinated/pregnant-women எனும் வலைத்தலப் பக்கத்தினைப் பாருங்கள்.

* இந்தக் குழுக்களில் உள்ளவர்களுக்கு Pfizer, Moderna, அல்லது Novavax ஆகியன தெரிவு செய்யப்படும் தடுப்பூசிகளாகும். இந்தத் தடுப்பூசிகள் கிடைக்காவிட்டால், தடுப்பூசியேற்றத்தினால் கிடைக்கும் பலன்கள் அதனால் ஏற்படக்கூடிய ஆபத்துகளை விட அதிகமாக இருந்தால், AstraZeneca கருத்தில் கொள்ளப்படலாம்.

மேலதிகத் தகவல்களுக்கு https://www.health.gov.au/initiatives-and-programs/covid-19-vaccines/advice-for-providers/tts எனும் வலைத்தலப் பக்கத்தினைப் பாருங்கள்.

Pfizer அல்லது Moderna -வைப் பெறுபவர்களுக்கு மட்டும் பொருந்தும்:

☐	☐	முன்பு இடப்பட்ட Pfizer அல்லது Moderna தடுப்பூசிக்குப் பிறகு 'மையோகார்டைட்டிஸ்' (myocarditis) மற்றும்/அல்லது பெரிகார்டைட்டிஸ்' (pericarditis) உங்களுக்கு ஏற்பட்டதாகக் கண்டறியப்பட்டுள்ளதா?
☐	☐	கடந்த மூன்று மாதங்களுக்குள்ளாக உங்களுக்கு மையோகார்டைட்டிஸ்' அல்லது பெரிகார்டைட்டிஸ்' ஆகிய இதய அழற்சிகள் உங்களுக்கு ஏற்பட்டிருக்கின்றனவா?
☐	☐	தற்சமயம் உங்களுக்கு கடுமையான 'ருமாட்டிக் ஃபீவர்' எனப்படும் மூட்டு, மூளை, இதயத்தைப் பாதிக்கும் காய்ச்சல் அல்லது கடுமையான 'ருமாட்ட்டிக் இதய நோய் இருக்கிறதா?
☐	☐	உங்களுக்கு கடுமையான மாரடைப்புக் கோளாறு இருக்கிறதா?

மேலேயுள்ள கேள்விகள் எதற்கும் நீங்கள் '**ஆம்**' என்று பதில் அளித்திருந்தால், உங்களால் இப்போதும் Pfizer அல்லது Moderna தடுப்பூசியைப் பெற இயலுமாகலாம்,

பெயர்:												
'மெடிகெயர்' இலக்கம்:												

இருந்தாலும், தடுப்பூசியை இட்டுக்கொள்வதற்கான நல்ல நேரத்தையும், கூடுதல் முன்னெச்சரிக்கைகள் எதுவும் உங்களுக்குத் தேவைப்படுமா என்பதைப் பற்றியும் ஆலோசிப்பதற்காக நீங்கள் உங்களுடைய பொது மருத்துவர், தடுப்பு-மருந்து வல்லுநர், அலது இதய-நோய் வல்லுநருடன் பேசவேண்டும்.

கடைசிப் புதுப்பிப்பு: 7 ஜூலை 2022

பெயர்:												
'மெடிகெயர்' இலக்கம்:												

நோயாளரைப் பற்றிய தகவல்கள்

பெயர்:	
'மெடிகெயர்' இலக்கம்:	
'தனிநபர் சுகாதார அடையாளக்-குறி' (Individual Health Identifier (IHI) பொருந்தினால்:	
பிறந்த திகதி:	
விலாசம்:	
தொடர்புத் தொலைபேசி இலக்கம்:	
மின்னஞ்சல் முகவரி:	
பாலினம்:	
வீட்டில் பேசப்படும் மொழி:	
பிறந்த நாடு:	

நீங்கள் 'ஆபொரிஜினி'ப் பூர்வகுடி மற்றும்/அல்லது 'டோரிஸ் நீரிணை'த் தீவகத்தவரா?

- ☐ ஆம், 'ஆபொரிஜினி'ப் பூர்வகுடி மட்டும்
- ☐ ஆம், 'டோரிஸ் நீரிணை'த் தீவகத்தவர் மட்டும்
- ☐ ஆம், 'ஆபொரிஜினி' மற்றும் 'டோரிஸ் நீரிணை'த் தீவகத்தவர்
- ☐ இல்லை
- ☐ பதில் அளிக்க விரும்பவில்லை

அடுத்த நெருங்கிய உறவு (அவசரநிலை ஏற்படும் தருணத்தில்):	
பெயர்:	
தொடர்புத் தொலைபேசி இலக்கம்:	

‘கோவிட்-19’ தடுப்பூசி மருந்து இட்டுக்கொள்வதற்கான சம்மதம்

☐ ‘கோவிட்-19’ தடுப்பூசி மருந்து இட்டுக்கொள்வதைப் பற்றி எனக்குக் கொடுக்கப்பட்டுள்ள தகவல்களை நான் பெற்றுக்கொண்டிருக்கிறேன் மற்றும் அவற்றை விளங்கிக்கொண்டிருக்கிறேன் என்பதை உறுதிப்படுத்துகிறேன்.

☐ மேலே உள்ள நோய்நிலைகள் எதுவும் எனக்கு இல்லை மற்றும் அவை எனக்குப் பொருந்தாது என்றும், அல்லது இந்த நோய்நிலைகளைப் பற்றியும், மற்ற எவ்வொரு விசேட சூழ்நிலைகளைப் பற்றியும் என்னுடைய வழமையான சுகாதாரப் பராமரிப்பு வழங்குநர் மற்றும்/அல்லது தடுப்பூசி மருந்து சேவை வழங்குநருடன் நான் கலந்துரையாடியிருக்கிறேன் என்றும் நான் உறுதிப்படுத்துகிறேன்.

☐ ’கோவிட்-19’ தடுப்பூசி மருந்துகளை இட்டுக்கொள்ள நான் சம்மதிக்கிறேன் / ‘கோவிட்-19’ தடுப்பூசியின் ஊக்க அளவு ஒன்றை இட்டுக்கொள்ள நான் சம்மதிக்கிறேன்.

நோயாளரது பெயர்:	
நோயாளரது கையொப்பம்:	
திகதி:	

☐ நான் நோயாளியின் பெற்றோர், பாதுகாவலர் அல்லது அவருக்குப் பதிலாக முடிவெடுக்கும் பதிலாள் ஆவேன், மற்றும் மேலே பெயர் சொல்லப்பட்டுள்ள நோயாளிக்குக் ‘கோவிட்-19’ தடுப்பூசி மருந்து இடப்படுவதற்கு நான் சம்மதிக்கிறேன்.

பெற்றோர்/பாதுகாவலர்/முடிவெடுப்புப் பதிலாளரது பெயர்:	
பெற்றோர்/பாதுகாவலர்/முடிவெடுப்புப் பதிலாளரது கையொப்பம்:	
திகதி:	

பெயர்:												
‘மெடிகெயர்’ இலக்கம்:												

சேவை வழங்குநரது பயன்பாட்டிற்காக:

மருந்தளவு 1:

தடுப்பூசி மருந்து இடப்பட்ட திகதி:	
தடுப்பூசி மருந்தைப் பெற்றுகொண்ட நேரம்:	
இடப்பட்ட 'கோவிட்-19' தடுப்பூசி மருந்தின் வர்த்தகப் பெயர்:	
தொகுதி இலக்கம் (Batch no):	
வரிசை இலக்கம்:	
தடுப்பூசி மருந்து இடப்பட்ட இடம்:	
தடுப்பூசி மருந்து சேவை வழங்குநரது பெயர்:	

மருந்தளவு 2:

தடுப்பூசி மருந்து இடப்பட்ட திகதி:	
தடுப்பூசி மருந்தைப் பெற்றுகொண்ட நேரம்:	
இடப்பட்ட 'கோவிட்-19' தடுப்பூசி மருந்தின் வர்த்தகப் பெயர்:	
தொகுதி இலக்கம் (Batch no):	
வரிசை இலக்கம்:	
தடுப்பூசி மருந்து இடப்பட்ட இடம்:	
தடுப்பூசி மருந்து சேவை வழங்குநரது பெயர்:	

மருந்தளவு 3 அல்லது ஊக்க ஊசி*:

தடுப்பூசி போடப்பட்ட திகதி:	
பெற்றுக்கொண்ட நேரம்:	
செலுத்தப்பட்ட கோவிட்-19 தடுப்பு ஊசிமருந்தின் வர்த்தகக் குறி:	

பெயர்:												
'மெடிகெயர்' இலக்கம்:												

தொகுதி இலக்கம்:	
தொடர் எண்:	
தடுப்பூசி போடப்பட்ட இடம்:	
தடுப்பூசி மருந்து சேவையை வழங்குபவர் பெயர்:	

* ஆஸ்திரேலியாவில் தடுப்பூசிகளின் பயன்பாட்டைப் பற்றிய ATAGI-யின் மருத்துவ வழிகாட்டியைப் பாருங்கள்: https://www.health.gov.au/initiatives-and-programs/covid-19-vaccines/advice-for-providers/clinical-guidance

கடைசிப் புதுப்பிப்பு: 7 ஜூலை 2022

பெயர்:												
'மெடிகெயர்' இலக்கம்:												